# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 11 புதன்கிழமை (25-06-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 206


# கடும் எதிர்ப்புக்கு மத்தியில் படைகள் தொடர்ந்து நகர்வு!

## பனிச்சபுளியங்குளம் வரை முன்னேறியதாக அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 55 ஆவது 53 ஆவது படையணிகள் புலிகளின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் நேற்று மேலும் வடக்கு நோக்கி நகர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தையிலிருந்து நகர்ந்த 55 ஆவது படையணி நேற்று புளியங்குளத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பனிச்ச புளியங்குளத்தை அடைந்ததாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

நெடுங்கேணியில் இருந்து நகரும் 53 ஆவது படையணியும் புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்நோக்கி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புளியங்குளம் நகரைக் கைப்பற்ற இன்னும் ஒரு கிலோ மீற்றர் தூரமே இருப்பதாகவும் புளியங்குளம் எந்த நேரத்திலும் கைப்பற்றப்படலாம் எனவும் இராணுவத் தரப்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

நெடுங்கேணியிலிருந்து முன்னேறும் 53 ஆவது படை அணியே புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் ஒருடாங்கி அழிக்கப்பட்டதாகவும் இரண்டு டாங்கிகள் சேதமாக்கப்பட்டன எனவும் தமது தரப்பில் 11 போராளிகள் களப்பலியானதாகவும் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

நேற்று பனிச்சபுளியங்குளத்தில் இடம் பெற்ற மோதலில் 5 போராளிகள் களப்பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரச தரப்புத்தகவல்களின் படி நேற்றுவரை ஓர் அதிகாரி உட்பட 14 படையினர் பலியாகியுள்ளனர். 81 படையினர் காயமடைந்துள்ளனர்.

புலிகள் தரப்பில் 43 பேர் பலியானதாகவும் 50 பேர் காயமடைந்ததாகவும் அரசு தெரிவித்தது. (4-10-164)

## ஷெல் தாக்குதலில் 6 பொதுமக்கள் பலி!

பனிச்சபுளியங்குளத்தில் இடம் பெற்ற ஷெல் வீச்சில் ஆசிரியர் ஒருவர் உட்பட ஆறு பொதுமக்கள் நேற்று உயிரிழந்தனர்.

கே. தில்லைநாதன் (ஆசிரியர்), கே. சசிக்குமார், சி. பொன்னுத்துரை, அவரது பிள்ளைகளான மோகனதாஸ், காந்தரூபன் மற்றும் கா குலநாதன் ஆகியோரே இறந்தவர்கள் ஆவர். (இ-10-164)

## பொலீஸ் காவல் நிலையம் மீது ஏறாவூரில் புலிகள் தாக்குதல்!

### ஆயுதங்களும் எடுத்துச் செல்லப்பட்டன

மட்டக்களப்பு, ஜூன் 25

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர், ஐயன்கேணி பொலீஸ் காவல் நிலையம் மீது நேற்று நண்பகல் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 பொலீஸார் கொல்லப்பட்டனர். 3 பொலீஸார் காயமடைந்தனர்.

நண்பகல் 12 45 மணி முதல் 1. 15 மணி வரை இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் எல். எம். ஜி — 1, ரி. 56 ரக துப்பாக்கிகள் — 4, கிரனேட்டுகள் — 4, தகவல் உபகரணம் — 1 ஆகியவையும் தொலைக் காட்சிப் பெட்டி, டெக் ஆகியவையும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டதாக நேற்று மட்டக்களப்புப் பகுதியில் புலிகளால் விடுக்கப்பட்ட அறிவிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## பரிசளிப்பில் பங்குபற்றத் தவறிய யாழ். மாவட்டப் பாடசாலைகள்

### டிவகலாலா நேரில் அழைத்து குறைகளை கேட்டறிந்தார்

திருகோணமலை, ஜூன் 25

திருகோணமலை சென். ஜோசப் கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை நடந்த தமிழ்மொழித்திறன் போட்டிப் பரிசளிப்பில் யாழ். மாவட்டத்தில் இருந்து சென்று பங்குபற்றி வெற்றி பெற்ற பாடசாலைகள் பல பங்குபற்றவில்லை.

போட்டிகளில் இடம் பெற்ற சில குறைபாடுகளால் அதிருப்தியடைந்தே அவை பரிசளிப்பு விழாவில் பங்கு பற்றவில்லை என்று பரவிய தகவலையடுத்து, மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களை நேற்றுக் காலை தமது அலுவலகத்துக்கு அழைத்துப் பேச்சு நடத்தினார்.

போட்டி மத்தியஸ்தம் சரியில்லை என்பது உட்படப் பல குறைபாடுகளை அவர்கள் செயலாளரிடம் எடுத்துக் கூறினர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அஷ்ரப் பதவிப்பிரமாணம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் துறைமுகங்கள் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னிலையில்பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அலரி மாளிகையில் நேற்றிரவுஇந்த நிகழ்ச்சி இடம்பெற்றது. (இ-4-10-21)

## சிறிமாவோவை நேற்று சிறிமானி சந்தித்தார்

### எனினும் விவரம் வெளிவரவில்லை

கொழும்பு ஜூன் 25

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவியான சிறிமானி அத்துலத்முதலி நேற்று பிற்பகல் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்காவைச் சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்பு பல மணி நேரம் நீடித்தது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது அமைச்சர் பதவி தமக்கு மீண்டும் தரப்படவேண்டும் என்று தாம் வேண்டுகோள் விடுக்கவில்லை என்று சிறிமானி கூறினார்

சமீபத்திய அமைச்சரவை மாற்றத்தின் போது சிறிமானி அத்துலத்முதலி அமைச்சர் பதவியை இழந்தது தெரிந்ததே.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவே தம்மை அரசுக்குள் கொண்டு வந்ததாகவும் —

அவரைச் சந்தித்துப் பேசிய பின்னரே தமது அடுத்த நடவடிக்கை குறித்துத் தீர்மானிக்கப் போவதாகவும் சிறிமானி முன்னர் அறிவித்திருந்தார். (இ-4)

## சரத் கொங்கஹறகே உட்பட ஐவர் ஐ.தே.கவிலிருந்து இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 25

ஐ. தே. கவின் தேசியப் பட்டியல் எம். பி. சரத் கொங்கஹறகே உட்பட ஐவர் ஐ. தே. கவிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

அவரது மனைவி சாந்தினி கொங்கஹறகேயும் அவர்களில் ஒருவர்.

ஐ.தே.கவின் முன்னாள் அமைச்சரும், பொதுச் செயலாளருமான சிறிசேன கூரே தலைமையில் இயங்கும் பிரேமதாச நிலையத்துடன் இவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சரத் கொங்கஹறகேயின் மனைவி சாந்தினி கொங்கஹறகே கண்டி மாவட்ட ஐ. தே. க. மாதர் பிரிவு அமைப்பாளராகக் கடமையாற்றி வந்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா பிறந்ததின விழாவை ஐ. தே. க. பகிஷ்கரிக்கும்!

கொழும்பு, ஜூன் 25

இம் மாதம் 29 ஆம் திகதி கொழும்பு சுகததாச அரங்கில் நடைபெறும் பிரேமதாசாவின் 73 ஆவது பிறந்த தின விழாவில் ஐ.தே.க. பங்கு பற்ற மாட்டாது.

நேற்று நடைபெற்ற ஐ.தே க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே தலைமையில் இயங்கும் பிரேமதாசா கேந்திர நிலையம் இந்தப் பிறந்த நாள் விழாவுக்கு ஏற்பாடு செய்திருப்பது தெரிந்ததே.

பிரேமதாச பிறந்த நாள் விழாவின் பிரதம அமைப்பாளர் தயான் ஜயத்திலக ஐ. தே. க. வின் முடிவு குறித்து ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

இந்த விழாவில் பங்கு பற்றுவதாக ரணில் விக்கிரமசிங்க தமது சகாக்கள் மூலம் ஏற்கனவே அறிவித்திருந்தார் என்றும் —

பகிஷ்கரிப்புத் தீர்மானம் தமக்கு ஆச்சரியத்தை அளிப்பதாகவும் அவர் கூறினார், (இ-4-21)

## நாராயணன்—சேஷன் மட்டுமே போட்டி!

### ஏனைய மனுக்கள் நிராகரிப்பு

புதுடில்லி, ஜூன் 25

இந்திய ஜனாதிபதி தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நேற்று மீளாய்வு செய்யப்பட்டபோது தாக்கல் செய்யப்பட்ட 54 வேட்பு மனுக்களில் இரு மனுக்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்பட்டன. எஞ்சிய 52 வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

தற்போதைய இந்திய உப ஜனாதிபதி கே. ஆர். நாராயணன், முன்னாள் தலைமைத் தேர்தல் கமிஷனர் ரி. என். சேஷன் ஆகியோரின் மனுக்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப் பட்டன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
எமது நண்பி சாரதாதேவியின் தந்தையாருமாகிய

### பாமு தேவராஜா

அவர்கள் காலமான துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பிகள்-

(48002)

## கண்ணீர் அஞ்சலி

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
எமது நண்பி மேகலாவின் தந்தையாருமாகிய

### செல்லப்பா இராசலிங்கம் அவர்கள்

காலமாகிய துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பிகள்.

(48003)

## கண்ணீர் அஞ்சலி

தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய
பரிபாலனசபைப் பொருளாளர்
**திரு. பே. சோமசேகரம்**
அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி பவானி சின்னத்தம்பி

அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**தலையாழி அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானம் பரிபாலன சபை, இந்து இளைஞர் மன்றம், தலையாழி, கொக்குவில்.**

(47296)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் ஆழ்வார் கிட்டினர்

மலர்வு: 01 - 04 - 1928
உதிர்வு: 26 - 05 - 1997

அன்பின் திருவுருவாய், அமைதியின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், குடும்பத்தின் குலவிளக்காய், ஊர் புகழும் உத்தமனாய், மாண்புடன் வாழ்ந்து எமக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 25 - 06 - 97 புதன்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**- குடும்பத்தினர்.**

''துவாரகை'',
வரணி வடக்கு,
வரணி.

(48007)

## கணக்காய்வுப் பரீட்சைப்பதவி

யாழ்ப்பாணம் ஜூன் 25

அரசாங்க கணக்காய்வுப் பரீட்சகர் பதவி தரம் II க்கு கணக்காய்வாளர் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பட்டதாரிகள் அல்லது கணக்கியல் டிப்ளோமா அல்லது கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப்பரீட்சையில் கணக்கியல், பொருளாதாரம், வணிகவியல், கணிதம் ஆகியபாடங்களில் சித்தியெய்தியவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 30-ஆம் திகதியாகும். (அ-15)

## கொழும்புக்கு கடல் அட்டை

குருநகர், ஜூன் 25

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் அஸ்ரோறியா என்னும் கப்பலில் கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்காக பதினாயிரம் கிலோவுக்கு மேற்பட்ட பதனிடப்பட்ட கடலட்டை ஏற்றப்பட்டுள்ளது.

வட மாகாண கடற்றொழிலாளர் சமாசத்தின் 1600 கிலோ கடல் அட்டையும்—

குருநகர் ஐக்கிய கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத்தின் 1200 கிலோ கடல் அட்டையும்—

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் வியாபாரிகளின் 7300 கிலோ கடல் அட்டையும் — இதில் அடங்கும். (இ-51)

வெளிவந்துள்ளது!
**கணிதம்**
**ஆண்டு 4**
1996 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்துக்கான 20 கணித எண்ணக் கருக்களையும் நோக்கங்களாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது.
வெளியீடு:
**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.
(சி/1001)

**யோகப் பயிற்சி**
மண்டைப் பீநசம், தொய்வு முட்டு, நீரிழிவு, எக்சிமா, காக்காய்வலிப்பு, மூலவருத்தம், பாரிசவாதம் மற்றும் வாதப் பகுதிகள் முதலிய நோய்களால் அவஸ்தைப்படுகிறீர்களா? கவலை வேண்டாம்; அவைகளை யோகப் பயிற்சிகள் மூலம் முற்றாகக் குணப்படுத்தலாம், தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:
**வ. சண்முகம்**
**ஆஸ்பத்திரி ஒழுங்கை**
**சங்கானை.**
(47988)

**Samuel Sons & Co. Ltd.,**
206,208, Hospital Road,
Jaffna.

18-06-1997 ஆம் திகதிய உதயன் 5 ஆம் பக்கத்தில் வெளியான மேற்படி நிறுவன விளம்பரத்தில் —

கையிருப்பில் உள்ள இயந்திரங்களின் பட்டியலில் Grease Pump என்று இடம் [illegible] Grease [illegible] லாகப் பிரசுரமாகியதைத் திருத்தி வாசிக்கவும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பவானி சின்னத்தம்பி

சபாபதி வீதி, வண்ணார்பண்ணை கிழக்கைச் சேர்ந்த திருமதி பவானி சின்னத்தம்பி 24-06-97 செவ்வாய்க்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற த. சின்னத்தம்பி (முன்னாள் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் குமரேசன் (கணக்காளர்-கனடா), சிறிதம்பு (நிதிக்கட்டுப்பாட்டாளர்-சவூதி), சபாபதி (லண்டன்), பாலகுமார் (லண்டன்), செல்வநாயகி, கமலநாயகி (மக்கள் வங்கி), ரேவதி (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கு. கதிர்காமத்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) பி.சோமசேகரம் (ஓய்வுபெற்ற அரச எழுதுநர்), கமலசிங்கம் (பொறியியலாளர் - லண்டன்), அபிராமி (கனடா), யசீந்தா (சவூதி), மலர் (லண்டன்), உஷா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மாதங்கி, சாம்பவி, மயூரன், மஞ்சு, கிரிசாந்தன், சிந்துஜா, ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

இறுதிக்கிரியைகள் 24-06-97 செவ்வாய் மாலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பி. சோமசேகரம்**
(மருமகன்)

31/19, சபாபதி வீதி,
வண். கிழக்கு, யாழ்ப்பாணம்.

(47295)

### தம்பிராசா யோண்சன் பசில்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிராசா யோண்சன் பசில் 19-06-97 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் மேரி பவளத்தின் அன்புக் கணவரும் தம்பிராசா காலஞ்சென்ற மேரி திரேசா ஆகியோரின் அன்பு மகனும், லொய்ஸ், அலிஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி நல்லம்மாவின் மருமகனும், றூபி, யேம்சன், யஸ்ரின், அருட்தந்தை கிருபாகரன், அன்ரன், யேன், லலிதா, ஜறின் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் ஜேர்மனியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அருட்தந்தை த. யே. கிருபாகரன்**
(சகோதரன்)

அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

(47993)

### சின்னத்துரை நாகராசா

(பல. நோ. கூ. ச. முன்னாள் பணியாளர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வளலாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகராசா 23.06.97 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், கமலாதேவியின் (தொழில் உத்தியோகத்தர் — தொழிற்கந்தோர்— யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், தியாகராசா (ஜேர்மனி), திருமதி நாகேஸ்வரி பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும். சி. குமரகுருலிங்கம் (கூட்டுறவுப் பரிசோதகர், கிளிநொச்சி), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), திருமதி சி யோகமலர் தியாகராசா (ஏழாலை) ஆகியோரின் மைத்துனரும், வே. நல்லையா, கமலாதேவி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் 24.6.97 செவ்வாய்க்கிழமை தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**தா. கந்தசாமி**
கூட்டுறவுப் பரிசோதகர் யாழ்

254, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

(47996)

### கிருஷ்ணபிள்ளை திருநாவுக்கரசு (கிளி)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை திருநாவுக்கரசு 21 - 06 - 97 சனிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை நல்லம்மா் தம்பதிகளின் அன்பு மகனும் தங்கமுத்து (உருத்திரபுரம்), மகேஸ்வரி (சங்கத்தானை), கனகாம்பிகை (மீசாலை), மார்க்கண்டு (கிருஷ்ணா மில், வேம்பிராய்) கெங்காதேவி (மல்லாவி), திலகவதி (கனடா), மேகநாதன் (கனடா), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசலிங்கம், இரத்தினசிங்கம், சிவமூர்த்தி, சர்வானந்தம் (நீர்ப்பாசன திணைக்களம், வவுனிக்குளம்), சுவீந்திராசா (கனடா), அமிர்தாம்பிகை (ஆசிரியர், கனடா), பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், கந்தையா (மீசாலை), கந்தவனம், நடராசா, சண்முகம் (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் பெறாமகனும் கந்தசாமி, சின்னத்துரை, பரமகுரு, நல்லையா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் அன்னாரின் இல்லத்தில் 30 - 06 - 97 திங்கட்கிழமை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**கி. மார்க்கண்டு**
(சகோதரன்)

மீசாலை மேற்கு,
மீசாலை.

(47985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டில் புதிய கூட்டணி உருவாகும்

## தி. மு. க. - த. மா. கா உறவு விரிசல் அடைகிறது

சென்னை, ஜூன் 25

தமிழகத்தில் புதிய கூட்டணி ஒன்று ஏற்படும் நிலை உருவாகி வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தி. மு. கவுக்கும் தமிழ் மாநில காங்கிரஸுக்கும் இடையில் உள்ள உறவு சீர்கெட்டு வருகின்ற காரணத்தால் புதிய கூட்டணி ஒன்று ஏற்படும் வாய்ப்பு உருவாகி வருவதாக தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

தமிழ் மாநில காங்கிரஸ், அ. தி. மு. கவில் இருந்து வெளியேற்றப்பட்ட திருநாவுக்கரசு தலைமையிலான அணி, மறுமலர்ச்சி தி. மு. க. ஆகியன இணைந்து புதிய கூட்டணி ஒன்றை அமைக்கலாம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மாநில காங்கிரஸுக்கும், தி. மு. கவுக்கும் இடையில் ஏற்பட்ட மனக்கசப்பு இரு கட்சிகளும் பிரியும் அளவுக்கு விரிவடைந்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

# சுற்றுச்சூழல் பாதிப்பினால் உலகநாடுகளுக்கு பேராபத்து

## கோபி அனன் எச்சரிக்கை

நியூயோர்க், ஜூன் 25

சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுக்க உலக நாடுகள் உடனடி நடவடிக்கை எடுக்காது விட்டால் தீர்க்க முடியாத அளவுக்கு பாதிப்புக்கள் ஏற்படும் என்று ஐ. நா. தலைமைச் செயலர் கோபி அனன் எச்சரித்துள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐ. நா. மன்ற தலைமையகத்தில் 60-க்கு மேற்பட்ட உலகத் தலைவர்கள் கலந்து கொண்ட மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

பிறேஸிலில் 5 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சூழல் பாதுகாப்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இந்த மாநாட்டில் மறு ஆய்வு செய்யப்படுகிறது.

சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குறித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உலக நாடுகள் தோல்வியை சந்தித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பூமண்டல வெப்ப வாயுக் கழிவுகள் வெளியேற்றம் குறித்த ஒத்துக் கொள்ளப்பட்ட இலக்குகளை அடைவதில் நான்கு தொழில் வள நாடுகள் மட்டுமே வெற்றி கண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# காஷ்மீர் பற்றியும் பேச இந்தியா - பாக். இணக்கம்

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே 50 ஆண்டுகாலமாக கசப்பான பகைமைக்கு காரணமாக இருந்து வரும் காஷ்மீர் விவகாரத்தை சமாதானப் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ள இரு நாடுகளும் இணங்கியுள்ளன.

கலந்துரையாடப்பட இணக்கம் காணப்பட்ட விடயங்களை இரு தரப்புக் குழுக்களும் அறிவித்துள்ளன.

பாகிஸ்தான் - இந்திய பேச்சுக்கள் 3 வருடத்துக்கு முன்னர் ஆரம்பமான சமயம் அதில் காஷ்மீர் பிரச்சினையை சேர்க்க இந்தியா மறுப்புத் தெரிவித்திருந்தது. (இ-3)

# கொங்கோ பிரஸ்ஸவிலில் சண்டை தொடர்கிறது

பிரஸ்ஸவில், ஜூன் 25

மேற்கு ஆபிரிக்க நாடான கொங்கோ பிரஸ்ஸவிலில் இடம் பெற்றுவரும் உள்நாட்டுப்போருக்கு முடிவு காண டோகோவில் எட்டு நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடத்தும் நேரத்தில் கிளர்ச்சியாளர்களுக்கும், படையினருக்கும் இடையில் ஆட்லறி தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

இத் தாக்குதலால் தேசிய நாடாளுமன்றக் கட்டடத்துக்கு சேதம் ஏற்பட்டுள்ளது

கொங்கோ பிரஸ்ஸவிலுக்கு ஆபிரிக்க நாடுகள் அங்கம் வகிக்கும் சமாதானப் படையை அனுப்புவது என்று ஐ. நா பாதுகாப்புச் சபை தீர்மானம் எடுத்துள்ளது.

இது குறித்து ஆராயவே ஆபிரிக்க நாடுகள் டோகோவில் உச்சி மாநாடு நடத்துகின்றன. (இ - 3)

உலக அரங்கில்

## குண்டு வெடிப்பு

பிரஸ்ஸல்ஸ், ஜூன் 25


பெல்ஜியத்தில் உள்ள துருக்கித் தூதரகத்தின் வெளியே குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. (இ)

# லாலு பிரசாத் யாதவுக்கு எதிராக மத்திய புலனாய்வுத்துறை வழக்கு

பட்னா ஜூன் 25

தொளாயிரத்து ஐம்பது கோடி ரூபா கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் பீஹார் மாநில முதல்வர் லாலுபிரசாத் யாதவுக்கு எதிராக நேற்று முன்தினம் மத்திய புலனாய்வுத் துறையினர் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட 55 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.



பொருளாதாரம் தொடர்பாக ஒரு முதலமைச்சருக்கு எதிராக மத்திய புலனாய்வுப் பிரிவு குற்றஞ்சாட்டியிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இதற்கிடையில் தாம் கைது செய்யப்படுவதற்கு தடைவிதிக்குமாறு கோரி லாலு பிரசாத் யாதவ் தாக்கல்செய்த மனுவை பட்னா உயர்நீதி மன்றம் நேற்று முன்தினம் நிராகரித்தது. (இ - 10)

# ஜனாதிபதித் தேர்தலில் வேட்பு மனு தாக்கல் முடிவு

புதுடில்லி, ஜூன் 25

இந்திய ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வது நேற்று முன்தினம் முடிவடைந்தது.

ஜூலை நடுப்பகுதியில் இடம்பெறும் இத் தேர்தலில் சுமார் 4 ஆயிரம் பேர் வாக்களிக்கவிருக்கின்றனர்.

தற்போதைய உப ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் அடுத்த ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவருக்கு ஆளும் ஐக்கிய முன்னணி, காங்கிரஸ், எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா ஆகியவற்றின் ஆதரவு உள்ளது.

இவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் தாழ்த்தப்பட்ட மக்கள் பின்னணியில் இருந்து வரும் முதலாவது ஜனாதிபதியாக இவர் விளங்குவார்.

இவருக்குப் போட்டியாக இருப்பவர் முன்னாள் தேர்தல் ஆணையாளர் ஷேசன் ஆவார். (இ-3)

## ஆப்கானில் சண்டை நீடிப்பு

காபூல், ஜூன் 25

ஆப்கானிஸ்தானின் தலிபானை எதிர்க்கும் படைகள் வடக்கு கென்டுசி நகரத்தை கைப்பற்றிவிட்டன என்று ஆப்கானிஸ்தானில் இருந்து ரோய்ட்டர் செய்தியாளர் தெரிவித்தார்.

ஆனால் தலிபான் அரசு இச்செய்தியை மறுத்துள்ளது. (இ-3)

## வடகொரியாவில் கடும் பஞ்சம்

சோல், ஜூன் 25

பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட வடகொரியாவுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குமாறு உலக நாடுகளை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு கேட்டுள்ளது. (இ-3)

## மத்திய ஆபிரிக்க குடியரசில் சண்டை

பொங்கே, ஜூன் 25

மத்திய ஆபிரிக்க குடியரசில் அரச படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன.

4 ஆவது நாளாக தொடரும் சண்டையில் திங்கட்கிழமை மட்டும் 30பேர் இறந்துள்ளனர்.

அங்கு நிலை கொண்டுள்ள பிரெஞ்சு சமாதானப் படையினர் ரோந்துப் பணிகளை அதிகரித்துள்ளது. (இ-3)

# இந்தியாவும் பாகிஸ்தானும் மீனவக் கைதிகளை விடுவிக்கும்

புதுடில்லி, ஜூன் 25

இந்தியாவும், பாகிஸ்தானும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த தத்தமது நாடுகளில் காவலில் உள்ள பல நூற்றுக்கணக்கான மீனவர்களை விடுதலை செய்யப்போவதாக அறிவித்துள்ளன.

இஸ்லாமாபாத்தில் நடந்த பேச்சுக்களின் போது இந்த இணக்கம் ஏற்பட்டது.

மீனவர் விடுதலை அடுத்த மாதம் 15 ஆம் திகதியளவில் பூர்த்தியாகவிருக்கிறது.

மீனவர்களுடன் அவர்களது படகுகளும் விடுவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# ஈராக் மீதான தடையை வலுப்படுத்த ஐ. நா. முடிவு

ஈராக் மீதான வர்த்தகத் தடை மேலும் வலுப்படுத்தப்படும் என்று ஐ. நா. பாதுகாப்புச் சபை எச்சரித்துள்ளது.

ஈராக்கின் பிரச்சினைக்குரிய பகுதிகளில் தடை செய்யப்பட்டுள்ள ஆயுதங்கள் இன்னும் இருப்பதாக ஐ. நா. கருதுகிறது.

ஆனால் ஐ. நா. விசாரணைக்குழு ஈரானுக்குச் சென்று இதனைப் பார்வையிட ஈராக் அனுமதி அளிக்க மறுத்துவிட்டது.

இதனை அடுத்தே வர்த்தகத் தடையை அதிகரிக்கப் போவதாக ஐ. நா. பாதுகாப்புச் சபை எச்சரித்துள்ளது. (இ)

# பிரிட்டனின் அழைப்பை ஐ. ஆர். ஏ. நிராகரித்தது

டென்வெர் ஜூன் 25

பேச்சுவார்த்தைக்கு வருமாறு பிரிட்டனின் புதிய அரசு விடுத்த அழைப்பை ஐ. ஆர். ஏ. எனப்படும் ஐரிஷ் குடியரசு ராணுவம் நிராகரித்து விட்டதாக நம்பப்படுகிறது.

ஐ. ஆர். ஏ. ஆறு வார கால யுத்த நிறுத்தத்துக்கு எழுத்து மூலம் உடன்படுமானால் அதன் அரசியல் பிரிவான சின்பெய்னுடன் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படும் என்று பிரிட்டிஷ் அரசு அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பு வெளிவந்து சில நாள்களில் வட அயர்லாந்தில் ஐ. ஆர். ஏ. யினால் இரு பொலீஸார் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைகள் குறித்து பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் ஆத்திரத்துடன் கருத்து வெளியிட்டுள்ளார். (இ

சக்திவாய்ந்த கச்சிதமான
நம்பகரமான
"டென்யோ"
ஜெனரேட்டர்





கையிருப்பிலிருந்து மாதிரிகள் கிடைக்கும்

★ 6. 5 கேவிஏ ஓசை குறைந்த (SOUND PROOF) டீசல், 3 பேஸ், சுயமாக இயங்கக் கூடியது ரூபா 2,75, 000/-
★ 2. 3, 2. 8, 3. 3, 3, 9 சிங்கிள் பேஸ் டீசல் என்ஜின் சுயமாக இயங்கக்கூடியது — ரூபா 75, 000/- மேல்
★ 2 கேவிஏ பெற்றோல் ரூபா 45, 000/-

கிடைக்குமிடம்:

N. M. L. TRADERS
என். எம். எல். டிரேடர்ஸ்
85, கொட்டா வீதி, பொரல்ல,
கொழும்பு - 8

தொலைபேசி எண்: 693617 பக்ஸ்: 57037

(சி/842)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனெஸ்கோவின் ஆதரவுடன் நடந்த

# பாடசாலைகளுக்கு இடையிலான இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

''யுனெஸ்கோ'' அமைப்பின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் கல்விக்கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன

போட்டி முடிவுகள் வருமாறு:-

**பேச்சுப் போட்டி பிரிவு I**

1 — த. கிளனிஸ்ரா புனித ஜோண் பொஸ்கோ வித்.

2 — கு. சிவரூபி (வண்ணை நாவலர் மகா வித்.)

3 — கு. துபாரகன் (கொழும்புத்துறை இந்து ம. வி).

**பிரிவு - II**

1 — எலிசா பிரியதர்சின் பிரான்சிஸ் (வேம்படி மகளிர் கல்லூரி).

2 — அ. கரிகேசனி (சென் பற்றிக்ஸ் கல்லூரி).

3 — அ. ஜோதினி (திருக்குடும்ப கன்னியர் மடம் வித்.).

**பிரிவு - III**

1 — ந. சுஜந்தா நவந்தினி (திருக்குடும்ப கன்னியர் மடம்).

2 — இ. சுஜித்தா (வேம்படி மகளிர் கல்லூரி).

3 — தாரணி ஸ்ரீ விஜயா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**பிரிவு - IV**

1 — செ. அகலியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

2 — யோ. காமலின் சுகந்தி (திருக்குடும்ப கன்னியர் மடம்)

3 — க. ஸ்ரீபுனித காசன் (கொழும்புத்துறை இ. ம. வித்.).

**பிரிவு - V**

1 — ம. பி. நிரோஷன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

2 — பூ. ஆரணி வேம்படி மகளிர் கல்லூரி)

3 — அ. சசிதராகுமாரி (திருக்குடும்ப கன்னியர் மடம் வித்.).

**வினா விடைப் போட்டிப் பிரிவு - IV, V**

1 — ஆ. செந்தூரன் (வைத்தீஸ்வராக் கல்லூரி)

2 — பி. ஜெனிற்றஸ் (கொழும்புத்துறை சென். ஜோசேப் வித்தி.)

**கவிதைப் போட்டி பிரிவு V**

1 — பி. அருள்ராஜன் (சென் சாள்ஸ் மகா வித்தி.)

2 — யோ. சசிகுமார் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

3 — ஜெனிற்றா ஜெயந்தினி பிரான்சிஸ் (திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தி.):

**ஆங்கில நாவன்மைப் போட்டி- பிரிவு - V**

1 — ச. சுமித்திரை (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

2 — அ. யூடி அங்கிலோ (சென் பற்றிக்ஸ் கல்லூரி).

**நாடகப் போட்டி**

1 — (சென் பற்றிக்ஸ் கல்லூரி). (இ-3)

## கலந்துரையாடல்

திருநெல்வேலி, ஜூன் 25

யாழ். பிராந்தியத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இன்று நடைபெறும்.

(அ-135)

வவுனியா-மதவாச்சி வீதித் தடையால்

# இரவுநேர போக்குவரத்து வவுனியாவில் பாதிப்பு!

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு வவுனியா — மதவாச்சி பிரதான வீதி வழியாக இரவு நேரங்களில் பயணம் செய்வதற்குப் பாதுகாப்புப் படையினர் தடை விதித்துள்ளனர்.

இரவு 7 மணி முதல் மறு நாள் காலை 7 மணி வரை இவ்வீதியில் வாகனங்களோ, பொதுமக்களோ செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது-

வவுனியா எல்லைநலர்ப்புற கிராமங்களிலும் மதவாச்சி காட்டுப் பகுதியிலும் விடுதலைப்புலிகளின் ஊடுருவல் அதிகரித்து வருவதாகப் பாதுகாப்பு படையினருக்குத் தகவல் கிடைத்திருப்பதை அடுத்தே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வவுனியா — மதவாச்சி பிரதான வீதியில் இரவு நேரங்களில் நடமாடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

இத்தடையினால் நோயாளர்கள் பாதிக்கப்படுவர் எனச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து நோயாளிகளை ஏற்றிச் செல்லும் அம்புலன்ஸ் வண்டிகளுக்கு மட்டும் இப்பாதை இரவு வேளை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக வவுனியா செய்திகள் தெரிவித்தன.

இத்தடை உத்தரவினால் வவுனியாவில் போக்குவரத்து சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. வியாபார நோக்கமாகசேவையில் ஈடுபடும் லொறி உரிமையாளர்களும், வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டிருப்பதாக வவுனியா தகவல்கள் தெரிவித்தன. (ஐ)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**பொதுப்பட்டமளிப்பு 1997 - 09 - 06**

டிப்ளோமாக்கள்/ பட்டங்கள்/ பட்டப்பின் டிப்ளோமாக்கள்/ முதுமாணி/

கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1997-09 - 06 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 1997 - 07 - 31-க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. கலாநிதித் தேர்வு
2. முதுதத்துவமாணித் தேர்வு
3. கல்விப் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் தேர்வு - 1994
4. வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணித் தேர்வு - 1994
5. வணிகமாணித் தேர்வு - 1994
6. தொழில் நிர்வாக மாணித்தேர்வு-1994
7. விஞ்ஞானமாணித் தேர்வு (பொது/ சிறப்பு - 1994
8. கலைமாணித் தேர்வு (பொது/ சிறப்பு) - 1994
9. இசை/பரத நாட்டியக் கலைமாணி (டிப்ளோமா) தேர்வு - 1994
10. சித்த வைத்திய, சத்திரசிகிச்சை மாணித் தேர்வு - 1994
11. விவசாய விஞ்ஞான மாணி - 1994

வேண்டுகோள்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகோள் படிவங்களையும், மற்றும் விவரங்களையும், முத்திரை ஒட்டிய 23X10 செ. மீ. அளவுடைய, சுயவிலாசமிடப்பட்ட கடித உறையை பிரதிப் பதிவாளர்/தேர்வுகளும் அனுமதிகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்குக் கிடைக்கப்பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

1997 - 06 - 23

(சி-996)



## வாழ்த்துகின்றோம்!

எமது சனசமூக நிலைய வளர்ச்சிக்காக கிராம மேம்பாட்டுக்காகவும் அரும்பணி ஆற்றிய,

**உயர்திரு. கி. நடராஜா M. A. அவர்கள்**

பதவியுயர்வு பெற்று உடுப்பிட்டி அ. மி. கல்லூரி அதிபரானதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம்! அன்னார் கல்வித்துறையில் பேரும் புகழும் விளங்க சீருஞ் சிறப்புகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்!

வாழ்க நும்பணி! வளர்க நும்புகழ்!

என வாழ்த்துவோர்:

பாரதி சனசமூக நிலையம்,
கம்பன் விளையாட்டுக் கழகம்,
கம்பன் தமிழ்க் கலா மன்றம்,
பாரதி இளைஞர் மன்றம்.

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(47994)



## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)

### வெற்றுச் சாக்கு, வெற்றுப் பை விற்பனை

10,000 வெற்றுச் சாக்குகளும், 29,600 வெற்றுப் பைகளும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. மீளப் பெறக்கூடிய வைப்புப் பணம் ரூபா 500/- செலுத்தி, கேள்வி விண்ணப்பங்களை 30-06-1997 திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் ''பொது முகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம்'' என விலாசமிட்டு அனுப்பிவைக்கவும்.

**பொது முகாமையாளர்,**
சங்கானை ப.நோ.கூ. சங்கம்.

(சி/997)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் உயர்தரவகுப்பு மாணவன்

**செல்வன் இ. முரளிதரனின் தந்தையார்**

**அமரர் செல்லப்பா இராசலிங்கம்**

(ஓய்வுபெற்ற அதிபர், வேலணை)

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு, அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றோம். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து, எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**13 'B' வகுப்பு மாணவர்கள்,**
(A/L 98 – கணிதப்பிரிவு)
**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

(48000)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 15 — 03 — 1925



மறைவு: 05 — 07 — 1996

**திருமதி தங்கராசா மகேஸ்வரி**

**திதி: 25 06 - 97**

அன்புத் தாயே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் அன்பும் உருவமும் எமது நெஞ்சை விட்டு அகலவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி ஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்,

மகன், மருமகன், பேரப்பிள்ளைகள்,
அண்ணி, மருமக்கள்,
பெறாமக்கள், உறவினர்கள்,

மருதடி,
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(சி - 957)

## ஓராண்டு நினைவுத் துளிகள்

மலர்வு: 20 — 05 — 1936



உதிர்வு: 19 — 05 — 1996

**திருமதி பராராசசிங்கம் அருந்தவராணி**

**திதி: 25 — 06 — 1997**

ஈரைந்து மாதமெனச் சுமந்திட்ட காவியமே!
அனுதினமும் எமைவளர்த்துக் காத்திட்ட ஓவியமே!
பாரைவிட்டு எமைப்பிரிந்து போனீரோ தாயே!
பரிதவித்துக் கதறுகிறோம் வந்திடுவாய் அம்மா!

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்:

**பிள்ளைகள்.**

அச்செழு, நீர்வேலி.

(47936)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ...நூலகம்

# குடாநாட்டுக்கான 34 டாக்டர்களில் ஒருவர் மட்டுமே யாழ். ஆஸ்பத்திரிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளுக்கு இம் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ள 34 வைத்தியர்களில் ஒருவர் மட்டுமே யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனையோர் மந்திகை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி வைத்தியசாலைகளுக்கு நியமனம் பெற்றுள்ளனர்

அதேநேரம்—நெடுங்கேணி வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள நான்கு வைத்தியர்கள் அங்கு செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

ஆகவே அவர்களும் தற்காலிகமாக யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடாநாட்டில் யாழ். போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளுக்கு நியமனம் பெற்றுள்ளவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே தங்கி உள்ளனர்.

இதற்கான வசதிகளைச் செய்யுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்கப்பட்டுள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் இந்த வைத்தியர்கள் அனைவரும் தங்க போதிய கட்டில் வசதிகள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

போதிய கட்டில்களை அனுப்ப சுகாதார அமைச்சர் இணங்கி உள்ளார்.

(இ-3)

## யாழ். ஆஸ்பத்திரி
## வைத்தியர் மற்றும் ஆளணியினர் பற்றாக்குறையால் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் மற்றும் தரத்தில் உள்ள ஆளணியினர் போதிய அளவில் இல்லாததால் வைத்தியசாலையின் சேவை மோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி நவமணி கனகரத்தினம் மேற்கண்டவாறு சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி.சில்வாவிடம் தெரிவித்தார்.

கடந்தவாரம் அவர் கொழும்பு சென்றிருந்த சமயம் அமைச்சரைச் சந்தித்திருந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணர் உட்பட வைத்திய நிபுணர்கள் இல்லை; போதிய வைத்தியர்கள் இல்லை; சகல தரத்திலும் பணியாற்ற போதிய ஊழியர்கள் இல்லை.

இதன் காரணமாக மக்களுக்குச் சேவையாற்ற முடியாத மோசமான நிலையை வைத்தியசாலை எதிர்நோக்கி நிற்கின்றது.

இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அவர் அமைச்சரிடம் கேட்டுள்ளார். (இ-3)

## மல்லாவி ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வவுனியாவில் தடுத்துவைப்பு

கொழும்பு, ஜூன் 25

வவுனியா ஆஸ்பத்திரியில் இருந்து ஒன்பது நோயாளர்களை ஏற்றிக்கொண்டு மல்லாவிக்குப் புறப்பட்ட மல்லாவி ஆஸ்பத்திரிக்கு சொந்தமான அம்புலன்ஸ் வண்டி கடந்தவாரம் முதல் வவுனியாவில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட சில பொருள்களை அந்த அம்புலன்ஸ் வண்டியினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே படையினர் அதைத் தடுத்து வைத்துள்ளனர். அம்புலன்ஸின் சாரதியும் அவரது உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் பயணம் செய்த 9 நோயாளர்களும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளைச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

## அகதிகள் வருகை தொடர்கிறது

குருநகர், ஜூன் 25

வன்னியில் இருந்து வள்ளங்கள் மூலம் குடாக்கடல் ஊடாக கடந்த வியாழக்கிழமை 108 பேரும், சனிக்கிழமை 55 பேரும், ஞாயிற்றுக்கிழமை 14 பேரும் குருநகர் இறங்குதுறைக்கு வந்தனர்.

(இ-51)

## தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் புனித மாரியாள் வித்தியாலயத்தின் தமிழ்விழா இன்று புதன்கிழமை நடைபெறும்.

இவ்விழாவில் யாழ். பிரதேச செயலர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

(இ-5)

## கைதானோர் பாதுகாவலர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஜூன் 25

கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணியளவில் மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெறும்.

இதில் கைதானோர் காணாமற் போனோர்களின் பெற்றோர்கள் தவறாது பங்கேற்குமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்,

# கொதிக்கும் வெயிலில் 3 மைல் தூரம் நடந்து கரை சேர்ந்த அகதிகள்

## பலருக்கு காலில் வெட்டுக் காயங்கள்

குருநகர், ஜூன் 25

மணற்பிட்டியில் இருந்து கொதிக்கும் வெயிலில் சுமார் மூன்று மைல் தூரம் நடந்துவந்தே தாம் குருநகர் இறங்கு துறையை அடைந்ததாகவும்—

கடலில் உள்ள 'ஆர்க்கு' வெட்டியதால் பலர் இரத்தம் ஓட, ஓட நடந்து வந்ததாகவும் நேற்று முன்தினம் வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக வந்து சேர்ந்த அகதிகள் பலரும் தெரிவித்தனர்.

கல்முனையில் இருந்து இவர்களை ஏற்றிவந்த வள்ளங்கள் கல்முனையில் இருந்து ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள மணற்பிட்டி என்ற இடத்தில் இவர்களை இறக்கிவிட்டுச் சென்றது தெரிந்ததே.

அகதிகளில் ஒருவரான திருநெல்வேலியைச் சேர்ந்த நா. தில்லையம்பலம் (வயது 67) என்பவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

படையினரால் வவுனியாவில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னியில் தொடர்ந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டது.

அரசினால் வழங்கப்பட்டு வந்த நிவாரணமும் ஏப்ரலுக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கவில்லை.

மருந்துகள் கிடைப்பதும் கஷ்டமாக இருந்தது. மலேரியா போன்ற நோய்களும் மீண்டும் வன்னியில் பரவ ஆரம்பித்துள்ளன.

இதன் காரணமாக நாம் மல்லாவியில் இருந்து பல சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்து பள்ளிக்குடா சென்றோம்

அங்கு பெரும் எண்ணிக்கையான அகதிகள் குருநகர் இறங்குதுறைக்கு வர வள்ளம் கிடைக்காமல் காத்து நின்றார்கள்.

நாங்கள் வந்து 10 நாள்களின் பின்னரே வள்ளங்கள் கிடைத்தன.

வள்ளத்துக்கு நான் 300 ரூபா கொடுத்தேன். அதுவும் மணற்பிட்டி வரை வருவதற்கே இந்தப்பணம் அறவிடப்பட்டது.

இப்படி அவர் கூறினார்.

காரைநகர் களபூமியைச் சேர்ந்த சிவலிங்கராசா (வயது 60) என்பவர் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போர் காரணமாக 1990 ஆம் ஆண்டில் எமது ஊரைவிட்டு வன்னிக்குச் சென்று மாங்குளத்தில் வாழ்ந்து வந்தோம்.

அங்கு நாம் வீடு கட்டி வயல் செய்து வந்தோம்.

தற்போது அங்கு விவசாயம் நல்ல நிலையிலுள்ளது. அத்துடன் அங்கு பலசரக்குக் கடையும் நடத்திவந்தோம்.

தற்போது அங்கு பயிர்களுக்கு தேவையான மருந்து வகைகளுக்கு பெரும்தட்டுப்பாடு நிலவுகிறது. வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை காரணமாக பொருள்கள் கிடைப்பதும் இல்லை. இதனால் தொழில் வியாபாரம் செய்வது கஷ்டமாக இருந்தது. மலேரியா நோயின் தாக்கமும் இருந்தது இதனாலேயே மக்கள் தமது இருப்பிடம் நோக்கித் திரும்ப ஆரம்பித்துள்ளார்கள்.

வன்னியில் நிரந்தரமாக உள்ள மக்கள் ஷெல் வீச்சுக்குத் தப்ப உள் பகுதிகளுக்கு சென்று தங்கி உள்ளனர்.

இப்படி அவர் கூறினார்.

(இ-51)


## தவறிவிட்டது

கடந்த 21 - 06 - 97 சனிக்கிழமை முதல் எமது வீட்டின் வெளிப் பகுதியிலிருந்து காணாமற் போயுள்ள தாலிக்கொடியை கண்டெடுத்தவர்கள் அதனை எம்மிடம் சேர்ப்பித்தால் சன்மானமாக பெறுமதியிலிருந்து நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் கொடுக்கப்படும்.

T. அலெக்ஸ்
34/8 ஏ மவுன்காமல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(47989)

## கலைமகள்
கல்வி நிலையம்

அம்மன் கோயிலடி
மீசாலை

A/L 99
பொருளியல்
புவியியல்
திரு. நித்தி
ஆரம்பம்: 28 - 06 - 97
சனி பி. ப. 3-00 மணி

-நிர்வாகி

(47997)

## விசேட அறிவித்தல்

வடமாநில
தெங்கு உற்பத்தியாளர் சங்கம்
பளை

எதிர்வரும் **03 - 07 - 1997** வியாழக்கிழமை அன்று 10.00 மணிக்கு (பழைய நேரப்படி) பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் அனைத்து தென்னந்தோட்ட உரிமையாளர்களையும் தவறாது சமுகம் தரும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். அன்றைய தினம் தென்னந் தோட்ட உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட நஷ்ட ஈடு சம்பந்தமாக கௌரவ ஜனாதிபதி அவர்களின் அலுவலகத்தால் கிடைக்கப் பெற்ற விவரம் தொடர்பாக ஆராயப்படுவதுடன் தோட்ட உரிமையாளர் அடையாள அட்டையும் வழங்கப்படும். இன்னும் மிக முக்கிய பிற விடயங்கள் ஆராயப்படவுள்ளன. தயவு கூர்ந்து உரிய நேரத்திற்கு சமுகம் அளிக்கும் படி அன்பாக வேண்டிக் கொள்கின்றோம்.

தலைவர்/பொருளாளர்

(48001)

Show Rotary Cares

## இளம் எழுத்தாளர்களே!

உங்கள் எண்ணக் கருத்துக்களை,
சொற்களில் வடித்து வெற்றிபெறுங்கள்!

விடயம்: - India-Unity in Diversity
வயது வரம்பு: 15 – 18 ஆண்டுகள் வரை.
(1997, ஜூலை 19 ஆம் தேதியன்று)
மொழி: ஆங்கிலம்/ தமிழ்.
போட்டிக்கான கால எல்லை:
ஜூன் 19 - ஜூலை 19

பரிசுகள்:
1 ஆவது — இந்தியாவில் ஒருகிழமை கல்விச் சுற்றுலா.
2 ஆவது — ரூ. 10,000/- (காசுப் பரிசு)
3 ஆவது — ரூ. 5,000/- (காசுப் பரிசு)

பங்கு பற்றுமுறை:
கட்டுரைகள் Fullscap அல்லது A/4 அளவு கடதாசியில் 1500 சொற்களுக்குள், தட்டச்சு செய்யப்பட்டோ அல்லது தெளிவான கையெழுத்தில் அமைக்கப்பட்டோ இருத்தல் வேண்டும். அத்துடன் உங்கள் பெயர், முகவரி, பிறந்த திகதி, படிக்கும் பாடசாலை ஆகிய சுய விவரத்தினை உள்ளடக்கியதாகவும் இவை யாவும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு, பின் வரும் முகவரிக்கு 1997 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

Director Youth Services,
Rotary Club of Colombo West,
C/o Associated Motorways Ltd.,
185, Union Place,
Colombo 2-

தலைவர்,
றோட்டரிக் கழகம், யாழ்ப்பாணம்.

(சி–999)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் 4½ பரப்புக்காணியும், ஆறு அறைகளைக் கொண்ட சகல வசதிகளும் உள்ள வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. அரியநாயகம், சட்டத்தரணி, 71/5, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். [47983]

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. கமலேஸ்வரி (குட்டி), 588/8, நாவலர் வீதி, (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை), காலை 11-00, மணியில் இருந்து பார்வையிடலாம். [47938]

வண்டில் உழவு வேலை செய்யக்கூடிய இரண்டு எருத்து மாடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: மாரியம்மன் மோட்டோர்ஸ் அருகாமை, மு. பாலசிங்கம் கோப்பாய். [47966]

முட்கிளுவை கதியால்கள் விற்பனைக்கு உண்டு. க. சர்வானந்தன், புத்தூர் வீதி, நவற்கிரி புத்தூர் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். [47967]

C 50 ஹொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- சிறீதேவி சலூன், 308, ஆலடிச் சந்தி, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [47964]

PSS — 290 (Yamahs) SA - 5, PT - 43, (Casio) ஆகிய ஓர்கன்களும், ஹார்மோனியங்களும், கிற்றாரும் விற்பனைக்குண்டு. முகவரி:- 23, குறோசற் வீதி, சுண்டுக்குளி (கல்வி வலயம்-1 இன் காரியாலயத்திற்கு அருகாமை). [47981]

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, T.V, கடைக்குரிய அலுமாரி, சோக்கேஸ், விறாக்கிகள் இன்னும் பல. உடன் தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோயிலடி பின் வீதி, நல்லூர், [47999]

### கைமாறப்பட்டது

யெசிகா கமெரா, 150 புகைப்படங்கள், 2 கசட் மற்றும் வேறு சில பொருள்களுடன் சாம்பல் நிறமுடைய கைப்பை C.T.B. பஸ்ஸில் கைமாறிவிட்டது. தகவலறிந்தவர் கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்கவும், ச. சந்திரதாஸ், யாழ். பேருந்து நிலைய காரியாலயம். சன்மானம் வழங்கப்படும். [47987]

### தேவை

லேத் மெசின் (கடைச்சல் இயந்திரம்) விற்பனைக்கு இருந்தால் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: வி, இராசலிங்கம், 109, சட்டநாதர் வீதி, நல்லூர், [47978]

### மணமகன் தேவை

1967 ஆம் ஆண்டில் பிறந்த கார்த்திகை நட்சத்திரத்தினை உடைய செவ்வாய் 4 இல் அமைந்துள்ள சைவ கௌரவ B.sc பட்டதாரிக்கு, படித்த மணமகனை எதிர்பார்க்கின்றோம். தொடர்பு: S.Ponnammah, Manalawaththal, Vathiry Karaveddy. [47990]

### தவறிவிட்டது

தர்மலிங்கம் சண்முகநாதன் என்பவருடைய விசேட அடையாள அட்டை தாவடிக்கும், தட்டாதெருவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 17/1, சபாபதி வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [47293]

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூல வியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
**சி. இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(47738)

## கேள்வி அறிவித்தல்

### கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

### யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்திற்குத் தேவையான கரும்பலகை தாங்கியுடன் வழங்கலும், விநியோகமும் - 1997

யாழ். கல்வித் திணைக்களத்திற்கும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கும் தேவையான கீழ்க்காணப்படும் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்கும் முத்திரையிடப்பட்ட கேள்விகள் தளபாட உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்களிடமிருந்து 1997-07-16 ஆம் திகதி காலை 11-00 மணி வரை யாழ். கல்வித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02) கேள்விகள் இத்திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட கேள்விப் படிவத்தில் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் கேள்வி முடிவு நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் 'கரும்பலகை தாங்கியுடன் வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான கேள்விகள்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 1997-07-16 அன்று கேள்வி முடிவு நேரத்திற்குப் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

03) கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள் ஆகியவற்றை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 250/- உம் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூ. 10,000/- ஆக மொத்தம் ரூ. 10,250/-க்கு வங்கிக் கட்டளையைச் சமர்ப்பித்து உரிய பற்றுச் சீட்டுக்களைப் பெற்று 1997-07-16 ஆம் திகதி காலை 11-00 மணிக்கு முன்னர் இத்திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேவையான தளபாடங்கள்:

01) கரும்பலகை தாங்கியுடன்

வங்கிக் கட்டளையை கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் என்ற பெயருக்குப் பெற்றுச் செலுத்த வேண்டும்.

**பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1997-06-18.

(சி/977)

## முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்ட கிராமசேவை அலுவலர் சங்கமும் தமிழ் பேசும் கிராம சேவை அலுவலர் சங்கமும் இணைந்து ஒரு பலமுள்ள சங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக பலஆண்டுகளுக்குமுன் இணக்கம் காணப்பட்டது. இது தொடர்பாக கிராம சேவையாளர்கள் மத்தியிலும் ஒத்த கருத்தே நிலவி வந்தது.

எனினும் அது செயல் வடிவம் பெறாமையால் இது தொடர்பான அமைப்புக் கூட்டம் ஒன்று எதிர் வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை திரு. க. சிவராசா (திருநெல்வேலி கிராம சேவையாளர்) தலைமையில் யாழ். பிரதேச செயலக கேட்போர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட கிராம சேவையாளர்கள் அனைவரும் சமுகந்தந்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெறும். ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

அமைப்பாளர்:
**ஜே. என். பி. பாக்கியராஜா,**
ஜே/65 பாஷையூர்,
மேற்கு கிராம சேவை அலுவலர்,
யாழ். பிரதேச செயலகம்.

(47995)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 11 — 1938



மறைவு: 29 — 06 — 1994

### அமரர் இ. இராமச்சந்திரன்

(ELECTRICAL FOREMAN)

**திதி: 25 - 06 - 1997**

அன்பின் திருவுருவாய் என்றும் நிலைத்திருந்தாய்
உள்ளத் தொளி வீசி இல்லத் தொளியானாய்
இன்றுபோலுள்ள தையா மூன்றாண்டு சென்றனவே!
என்றுமெம் நெஞ்சத்தில் இறையாக வீற்றிருப்பாய்
ஈரேழு பிறவியிலும் எம்மோடு வாழ்ந்திருப்பாய்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
உறவினர்கள்.


359/34 A, கோயில் வீதி,
நல்லூர்.

(47992)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை அரவணைப்பில்: 09 — 01 — 1971

ஆண்டவன் அடியில்: 06 — 06 — 1996



### செல்வன் கதிரன் கனகலிங்கம்

**திதி: 25 - 06 - 97**

அன்புக்கோர் ஆண் மகனாய்
பாசத்திற்கு அண்ணாவாய் — இம்
மண்ணில் உதித்தாயே மனம் மகிழ.
பதினைந்து வயதினிலே குடும்ப
கடமையை ஏற்று வழி நடத்தினாய்
அன்று யமனுக்கோ ஒரு மதி மயக்கம்
உன்னை கடலினிலே உறவுகளிலிருந்து
பிரித்தெடுக்க — அன்புத் தங்கைகள்
கதறுகிறோம் அண்ணா! ஏங்கித்
தவிக்கிறோம். எம் இடத்தில்
திரும்பி வருவாயா?

ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகிறோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

உனது பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா, தங்கைகள்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

கைதடி மத்தி,
குமரநகர்.

(47925)

## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களஞ்சேர் ஈசுர வருடம் ஆனி மாதம் 12ஆம் திகதி (26-06-97) வியாழக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் 9-00 மணி வரையுள்ள சுபவேளையில்

எமது ஏக புத்திரி திருவளர்செல்வி
★ **அருந்ததி அவர்களுக்கு** ★

பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

L.S. ஜெகநாதன் (மாமனார்)
(நாதஸ்வர வித்துவான்)

க. [illegible]
([illegible] வித்துவான்)

பாக்கியலட்சுமி குடும்பத்தினர்.

உடுப்பிட்டி,

(47977)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உணவுலொறிகள்

வன்னிப் பிரதேசத்தின் மிகப் பெரும் பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. அதனால் அப் பகுதி வாழ் மக்களும், ஏற்கனவே யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து ஏதிலிகளாகக் கஷ்டமுறும், ஒடுத்திரியும் மக்களும் உணவு மற்றும் மருந்து வகைகள் உட்பட்ட அத்தியாவசியப் பொருள்களைப் போதியளவில் பெறமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

அரசுக்கு எதிராகப் போராடும் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு உணவு மற்றும் தேவைகளைச் செய்து கொடுக்கும் உலகில் உள்ள ஒரேயொரு அரசு இலங்கை அரசாங்கமே என்று அதன் தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால் அரசு அனுப்பும் பொருள்கள் உரிய அளவில் உரிய நேரத்தில் சம்பந்தப்பட்ட மக்களுக்குக் கிடைப்பதில்லை. இதனை அப் பகுதிகளில் பணிபுரியும் சர்வதேச தொண்டர் அமைப்புகள் அடிக்கடி வெளியிடும் தகவல்களும் அறிக்கைகளும் உறுதிப் படுத்துகின்றன.

மிகக் குறிப்பாக, இராணுவ நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதும், இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பாவனைப் பொருள்கள் கிடைக்காமற் போவது வழக்கமாகிவிட்டது.

இத்தகைய நிலையில், வன்னியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உணவு மற்றும் பொருள்களை எடுத்துச் செல்லும் லொறி உரிமையாளர்கள் அந்தப் பணியைச் செய்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்கள்.

வன்னிப் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வவுனியாவில் இருந்து பறையனாலங்குளம் வரை பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகளை இராணுவத்தினர் தமது தேவைக்கு எடுத்துச் செல்கின்றனர். அந்த லொறிகளை நீண்ட காலம் தமது தேவைக்குப் பயன்படுத்துகின்றனர் என்று லொறி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று திருகோணமலையிலும் (பிரிமா ஆலையிலிருந்து மா ஏற்றிச்செல்லும்) தனியார் லொறிகளை இராணுவம் தனது தேவைகளுக்கு எடுத்துச் செல்வதை ஆட்சேபித்து லொறிச் சொந்தக்காரர்கள் இம்மாத மத்தியில் வேலை நிறுத்தம் செய்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில், தனியார் லொறிகளை இராணுவத்தினரின் தேவைக்கு எடுப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

அப்படியிருக்க, வன்னியில் மக்களுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லும் தனியார் லொறிகளை எடுப்பதனை இராணுவம் நிறுத்தாதது ஏன்?

இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்புறும் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு வவுனியா லொறிகளை இராணுவத் தேவைக்கு எடுப்பதனையும் நிறுத்த வேண்டும். இல்லையேல் அகதிகளை, இடம்பெயர்ந்தோரை மேன்மேலும் அவலமுற வைப்பதே அரசின் நோக்கம் என்றாகிவிடும்!

# வாடகை வாகனங்களைப் போல் பயன்படுத்தப்படும் விமானங்கள்!

### விபத்துக்கு இதுவே காரணம் என்கிறார் ஹரி குணதிலக

கொழும்பு ஜூன் 25

''இலங்கை விமானப்படையில் விமானங்கள் மற்றும் ஏனைய வான்கலன்கள் வாடகை வாகனங்களைப் போன்று பயன்படுத்தப்படுகின்றனவான்கலன்கள்வீழ்ந்து நொருங்குவதற்கான முக்கிய காரணம் இதுதான்'' இப்படி முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரிகுணதிலக தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் விமானப் படைக்குச்சொந்தமானவான்கலன்களின் பறக்கும் நேரம் 75 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதனால் விமானமோட்டிகள் களைப்புறுவதும் சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் விமானங்களில் இயந்திரக்கோளாறுகள் ஏற்படுவதும் சகஜமாகிவிட்டதெனவும் ஹரி குணதிலக தெரிவித்தார்.

இவ்வாறுவிமானங்களையும் விமானமோட்டிகளையும் தேவைக்கு அதிகமாகப் பணியில் ஈடுபடுத்தக் கூடாது என்பதை அரசாங்கத்திற்கும் அரசியல்வாதிகளுக்கும் தெளிவுபடுத்தாமல் விமானப் படை அதிகாரிகள் வாளாவிருப்பது அவர்கள் மேற்கொள்ளும் பெருந்தவறு ஆகும்.

மூன்றாவதுஈழப்போர்ஆரம்பமானதன் பின்னர் விமானப்படை 21 வான்கலங்களை இழந்துள்ளது. இந்த விபத்துக்களில் 18 விமானமோட்டிகள் பலியாகியுள்ளனர். இவற்றால் 300 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதெனவும் ஹரிகுணதிலக தெரிவித்தார்.

1993-1995 கால கட்டத்தில் விமானப்படைக்குச் சொந்தமான வான்கலங்கள் 14 ஆயிரத்து 500 மணித்தியாலங்கள் வான் பயணங்களை மேற்கொண்டிருந்தன. ஆனால் 1996 ஆம் ஆண்டில் மட்டும் இந்த வான்கலங்கள் 21 ஆயிரத்து 500 மணித்தியாலங்கள் பயணங்களை மேற்கொண்டுள்ளன எனவும் அவர் கூறினார். (இ-10)

## வ.பி. போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 25

நயினாதீவு உற்சவத்தையொட்டி சிறந்த முறையில் சேவை நடத்த ஒத்துழைத்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு சபையின் பொதுமுகாமையாளர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

சாலை முகாமையாளர், பஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொறியியல் அதிபர் ஆகியோர் தலைமையின் கீழ் சகலரும் பாராட்டும் விதத்தில் ஒருமகத்தான சேவையை வழங்கியதற்காக யாழ். சாலை சாரதி, காப்பாளர்கள் உள்ளிட்டசகல தர ஊழியர்களையும் பாராட்டுவதாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவை திறம்பட நடக்க உதவிய யாழ். காரைநகர், பருத்தித்துறை சாலை ஊழியர்களையும் அவர் பாராட்டியுள்ளார். (இ-3)

## துப்பாக்கிச்சூடு: பஸ் பயணிகள் மூவர் காயம்

மட்டக்களப்பு, ஜூன் 25

நேற்று முன்தினம் பட்டிருப்புப் பாலத்தில் உள்ள பொலீஸ் சோதனைச் சாவடியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பஸ் பயணிகள் மூவர் காயம் அடைந்தனர்.

தவறுதலாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டின்போது இவர்கள் இடையில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## தேசிய துணைப்படை வீரர் பலி!

மட்டக்களப்பு, ஜூன் 25

வாழைச்சேனை புதுக்குடியிருப்பில் நேற்று நண்பகல் 1.15 மணி அளவில் புலிகள் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலில் ராணுவ தேசிய துணைப்படையைச் சேர்ந்த இளங்கோ கிஷோர்குமார் என்பவர் கொல்லப்பட்டார். (இ-21)

## ஏற்புத்தடுப்பூசி இல்லை

யாழ். போதனா வைத்திய சாலை வெளி நோயாளர் பிரிவில் ஏற்புத்தடுப்பூசி மருந்து முடிவடைந்து விட்டது. ஏற்புத்தடுப்பூசி போட வேண்டிய பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். (இ-15)

## சமய சந்நிதிகளில்

நவாலி, ஜூன் 25

நவாலி சம்பேதுருவானவர் தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 20ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

எதிர்வரும் 29ஆம் திகதி காலை திருச்சொரூப பவனி இடம்பெறும். (இ-100)

★ ★ ★

நவாலி, ஜூன் 25

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்ட நூதன இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறும்.

தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும். (இ-100)

★ ★ ★

தென்புலோலி குரும்பை கட்டி வைரவர் கோயில் மகா சங்காபிஷேகம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

சாதாபானு சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக் குருக்கள் பிரதம குருக்களாக இருந்து இச் சங்காபிஷேகத்தை நடத்தி வைப்பார். (இ-173)

★ ★ ★

சாவகச்சேரி, ஜூன் 25

சாவகச்சேரி - கச்சாய் வீதி வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளைவியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (இ-31)

★ ★ ★

சாவகச்சேரி - சங்கத்தானை கந்தசாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (இ-31)

# அரசியல் தீர்வுகாணும் முயற்சியை இருகட்சிகளுமே இழுத்தடிக்கின்றன

### இதுவரை முக்கிய பிரச்சினைகளில் இணக்கம் இல்லை

**இனப் பிரச்சினை தொடர்பாக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து இதன் தலைவர் எம். சிவசிதம்பரம் பி.பி.சிக்கு அளித்த பேட்டியின் விவரம் வருமாறு.**

லண்டன், ஜூன் 25

இனப்பிரச்சினை தொடர்பாக இரண்டு விடயங்கள் குறித்து எமது அதிருப்தியை அரசுக்கு வெளியிட்டுள்ளோம்,

முதலாவது விடயம், இந்த அரசாங்கம் யுத்தத்தை நடத்தும் விதத்தைக் கண்டித்து நாம் ஓர் அறிக்கை விட்டிருந்தோம்.

ஓர் அரசியல் தீர்வு காண்பதற்கு யுத்தநிறுத்தம் அவசியம் என்று தற்போது வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

யுத்தத்தை நிறுத்துவது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாறாக மக்களை மேலும் மேலும் கஷ்டங்களுக்குள்ளாக்கும் வகையில் இந்த யுத்தத்தை நடத்துகின்றது.

இப்படியான யுத்தத்தைக் கண்டித்து - ஒரு யுத்த நிறுத்தத்துக்கு வராததைக் கண்டித்து - எதிர்வரும் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இருந்து வெளிநடப்புச் செய்வது என்று முடிவெடுத்துள்ளோம்.

இரண்டாவது விடயம், இந்த அரசியல் தீர்வை இரு பெரும் கட்சிகளும் இழுத்தடிக்கின்றன. அரசியல்தீர்வை நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்வைத்து ஏறத்தாழ ஒன்றரை வருடமாகி விட்டது. ஆனால் எந்தவொரு முக்கியமான முடிவு குறித்தும் இரு கட்சிகளும் ஓர் இணக்கத்துக்கு வரவில்லை.

அதிகாரப் பரவலாக்கல் அலகு குறித்து இரண்டு கட்சிகளும் ஒரு முடிவுக்கும் வராமல் ஒன்றை ஒன்று குறை கூறிக்கொண்டு இருக்கின்றன. தமிழ்க்கட்சிகள் எல்லாம் முஸ்லிம் கட்சியுடன் சேர்ந்து முடிவு எடுத்தால் அதனைத் தாம் பரிசீலிப்பதாக அக் கட்சிகள் தற்போது கூறுகின்றன.

இந்த இரண்டு பெரிய கட்சிகளும் 17 ஆண்டுகளாக இருந்து வரும் பிரச்சினை பற்றிச் சிந்திக்காமல் எங்களுடைய முடிவு என்ன? என்று கேட்பதுதங்களுடைய முடிவைத் தட்டிக் கழிப்பதாக இருக்கின்றது,

அவர்கள் ஏன் இந்த முக்கியமான பிரச்சினையில் தங்களுடைய நிலைப்பாட்டைக் கூறக் கூடாது.?

எனவே இந்த இரண்டு விடயங்களிலும் எமது அதிருப்தியை வெளியிட்டுள்ளோம்.

கேள்வி:- சமாதான முயற்சிகள் எடுக்கப்பட்டால் அதற்கு முழு ஆதரவும் வழங்கத் தயார் என ஐ.தே க. கூறியுள்ளது. அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்:- அது சொல்லளவில் தான் உள்ளது வேறு எந்த விதமான முயற்சியையும் அவர்கள் எடுக்கிறார்கள் இல்லை. அவர்கள் எப்படி இந்த சமாதானத்தைக் காண்பது? இந்தப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு தேவை என்பதை உணர்ந்து அவர்கள் செயற்படுவதாக இல்லை. சமாதானம், சமாதானம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் சமாதானம் வராது. அதற்கான வழிமுறைகளை அரசாங்கம் கோரவில்லை அரசாங்கமும் கடைப்பிடிப்பதாக இல்லை: யுத்தத்தை நிறுத்துவது தொடர்பாக ஐ. தே. க. இதுவரை ஒரு சொல் கூடக் கூறவில்லை.

கேள்வி:- உங்கள் அதிருப்தியைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளீர்கள். உங்கள் கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்க்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?

பதில்:- வருகின்ற வரவு — செலவுத்திட்டம் நாடாளுமன்றத்துக்கு வரமுன்னர் அரசியல் தீர்வை மக்கள் முன்னிலையில் வைப்பதாக ஜனாதிபதியும் பீரிஸும் ஒருமுறைக்கு பலமுறை கூறியுள்ளனர். ஐ. தே. க இந்தத் தீர்வை ஏற்றால் என்ன, ஏற்காவிட்டால் என்ன தாம் வேறு வழியில் இந்தத் தீர்வை மக்கள் முன் வைக்கப்போவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

அநேகமாக இத் தீர்வுத் திட்டம் நவம்பர் மாதம் வரும் என்று தெரிவிக்கப் பட்டு வருகிறது நாம் அதைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்தத் தீர்வு அப்போது வைக்கப்படாவிட்டால் அதற்குப் பின் நாம் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து எமது கூட்டணி கலந்தாலோசித்து வருகின்றது. (இ-5)

## நாளை

**ஆனி 12**

**வியாழக்கிழமை**

திதி: ஷஷ்டி

பிற்பகல் 1.01வரை.

நட்சத்திரம்: சதயம்

முற்பகல் 8.21 வரை.

சுபநேரம்: 7 25 - 8.55

ராகுகாலம்: 1 25-2.55

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை இராசநாயகம்
(ARNCO உரிமையாளர்)

கரவெட்டி வடக்கு நெல்லியடியைச் சேர்ந்த ஐயாத்துரை இராசநாயகம் 19-6-97 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விவேகமணியின் அன்புக் கணவரும், கௌரீசன் (கனடா), கௌரிசங்கர் (கனடா), கௌரிகண்ணன், திருமதி கௌரி, திருமதி மனோ ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மகேஸ்வரியின் அன்புச்சகோதரரும், திருமதி யுவராஜ் இராசேஸ்வரி (திலகம்) யின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-6-97 இல் முள்ளியவளையில் நடைபெற்றன.

தகவல்:
நா. நவரத்னம்

நெல்லியடி,
கரவெட்டி. (48005)

## செல்வன் விஜயராசன் விஜயசங்கர்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த முத்தையா விஜயராசன் காலஞ்சென்ற கலைமகள் (சுமதி) அவர்களின் அன்புச் சிரேஷ்ட புதல்வன் விஜயசங்கர் ஞாயிறு இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் யாழ். இந்துக் கல்லூரி ஆண்டு 10 மாணவனும், யாழினி (வேம்படி மகளிர் கல்லூரி ஆண்டு 8 மாணவி), விஜயசுமன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆண்டு 4 மாணவன்) ஆகியோரின் பாசமிகு அண்ணனும் காலஞ்சென்ற முத்தையா நாகரத்தினம், காலஞ்சென்ற புளியங்கூடலைச் சேர்ந்த கந்தப்பு விசுவலிங்கம் சிவமணி மற்றும் திரு. திருமதி துரைசிங்கம் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் செவ்வாய் மாலை 5-00 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு சுவேந்திரராஜன் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்றது.

தகவல்:
பெரியப்பாமார், சித்தப்பா,
மு. மகேந்திரராஜா.

கொக்குவில். (47294)

## கலாநிதி
## திருமதி மங்கையர்க்கரசி ஜெற்பிறைற்

கோப்பாய் மத்தி V. C. Lane ஐப் பிறப்பிடமாகவும், எதியோப்பியாவை (Addis Ababa) வசிப்பிடமாகவும் கொண்ட Dr. திருமதி மங்கையர்க்கரசி ஜெற்பிறைற் 16-06-97 எதியோப்பியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, அன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், ஜெயமுகி, தனஞ்சயன் ஆகியோரது அன்புத்தாயாரும், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் திருமதி சி. மனோன்மணி, செல்வரத்தினம் திருமதி வி. மகேஸ்வரி (கொழும்பு), குணசீலன் (கனடா), குணஈஸ்வரராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சி. பூமணி, திருமதி க. அழகம்மா (கொழும்பு), வே. சிவநாதன், திருமதி செ. மகேஸ்வரி அம்மாள், மா. விஜயரத்தினம்(கொழும்பு), திருமதி கு. ராணி (கனடா) திருமதி கு. யோகம் (பிரான்ஸ்) ஆகியோரது அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதியோப்பியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. செல்வரத்தினம் (செல்வம்)
(சகோதரன்)

''வசந்த கானம்''
கட்டப்பிராய், கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (47984)

## செல்லப்பா இராசலிங்கம்
( ஓய்வு பெற்ற அதிபர், வேலணை )

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பா இராசலிங்கம் 24 - 06 - 1997 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - மங்கையர்க்கரசி தம்பதிகளின் மூத்த புதல்வரும், யோகேஸ்வரியின் ( இளைப்பாறிய ஆசிரியை ) அன்புக் கணவரும், செழியன் (பொறியியல் பீட மாணவன் - கனடா), மேகலா (யாழ். பல்கலைக்கழக 4 ஆம் வருட வணிகத்துறை மாணவி), நிரஞ்சன் (ஸ்ரீ ஜயவர்த்தனபுர 1 ஆம் வருட மருத்துவ பீட மாணவன்), கேசவன், முரளிதரன் (யாழ். இந்துக் கல்லூரி 98 ஆம் ஆண்டு கணிதத்துறை மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை - கனடா), தர்மலிங்கம் (ஆசிரியர்-கொழும்பு), காலஞ் சென்ற சண்முகலிங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவலோகநாதன் (ஓய்வு பெற்ற அதிபர் - கனடா), கமலாதேவி (ஆசிரியை, கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி), சாந்தினி (ஆசிரியை, ஸ்ரான்லிக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இல. 346, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (48008)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-06-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# கடற்படை மோதல்

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத் தொடுவாயில் நேற்று அதிகாலை கடற்படைப் படகுகளுக்கும் புலிகளின் இரண்டு படகுகளுக்கும் இடையில் மோதல்இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் புலிகளின் படகுகளைக் கைப்பற்றியதாக அரசதரப்பு செய்திகள் தெரிவித்தன. (இ-3)

## நாராயணன்..
(முதலாம் பக்கத் தொடர்)

வேட்பு மனுக்களை மீளப் பெறும் கடைசித் திகதி இன்றாகும். சேஷன் இன்று தனது வேட்பு மனுவை வாபஸ் பெறுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

சேஷன் தனது வேட்பு மனுவை இன்று வாபஸ் பெறாவிடின் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு அடுத்த மாதம் 14 ஆம் திகதி நடைபெறும்.

சிவசேனை தவிர்ந்த ஏனைய அனைத்து தேசிய மற்றும் மாநிலக் கட்சிகள் கே. ஆர். நாராயணனுக்கே ஆதரவை வழங்குவததெனத் தீர்மானித்துள்ளன. இந்நிலையில் கே. ஆர். நாராயணன் இந்தியாவின் அடுத்த ஜனாதிபதியாவார் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. (இ-10)

## பரிசளிப்பில்...
(முதலாம் பக்கத் தொடர்)

ஆனால் அதற்காக தாம் பரிசளிப்பு விழாவில் பங்கு பற்றாதிருக்கவில்லை என்றும் —

கன்னியா போன்ற இடங்களுக்கு சென்றதாலேயே பரிசளிப்பில் கலந்துகொள்ளவில்லை என்றும் — அவர்கள் தெரிவித்தனர்.

அவர்களுக்கு பதில் அளித்த செயலாளர், ''நடந்தது நடந்து முடிந்து விட்டது. எதிர்காலத்தில் இந்தப் போட்டிகளை குறைபாடுகள் இன்றி நடத்தும் விதத்தில் பூரண விசாரணை ஒன்றை நடத்தப் போகின்றோம். அதற்கு உங்கள் பிரச்சினைகளை எழுதித்தாருங்கள்'' என்று தெரிவித்தார்.

இதையடுத்து பரிசளிப்பு விழாவில் பரிசு பெறாத மாணவர்களுக்கு, அங்கு வைத்து செயலாளர் பரிசில்களை வழங்கினார்.

அதே நேரம் —நேற்று முன்தினம் நடந்த பரிசளிப்புவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சுந்தரம் டிவகலாலாவும், பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தியும் அங்கு பேசுகையில், ''பிரதேச வாதத்தைக் கிளப்ப சிலர் முயற்சிக்கிறார்கள். இதற்குள் மாணவர்கள், ஆசிரியர்கள் சிக்கக் கூடாது'' என்று வேண்டுகோள் விடுத்தனர்.

பரிசளிப்பு வைபவத்தில் திருமலை மாவட்டப் பிராதியக் கல்விப் பணிப்பாளர் ஏ. ரி. ஆரியசேன தமிழில் பேசினார்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்துக்கான சாம்பியன் கேடயத்தையும் அவர் பெற்றுக் கொண்டார்.

யாழ் மாவட்டத்திலிருந்து வலயம் ஒன்று, இரண்டு என இரு பிரிவாக மாணவர்கள் கலந்து கொண்டதால் புள்ளிகள் பிரிந்து போயின. அதிகப் புள்ளிகளைப் பெற்ற திருகோணமலை மாவட்டத்துக்குச் சாம்பியன் கேடயம் வழங்கப்பட்டது.

அதே சமயம் திருகோணமலையில் நடந்த தமிழ் மொழித்திறன் போட்டிகளில் பங்குபற்றச் சென்று யாழ். மாவட்ட மாணவர்கள் இன்று யாழ்ப்பாணம் திரும்புகிறார்கள்.

திருகோணமலையிலிருந்து 'சஜிந்த' கப்பல் மூலம் இவர்கள் நேற்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்படவிருந்ததாக நேற்று மாலை திருமலையில் இருந்து [illegible] செய்திகள் தெரிவித்தன. (இ-3 150)

# ஐ. நா. அதிகாரிகள் வலி.வடக்கு விஜயம்

யாழ்ப்பாணம் வந்துள்ள ஐ நா. அமைப்புக்களைச் சேர்ந்த 3 அதிகாரிகளும் நேற்று வலி வடக்குப் பகுதிக்கு விஜயம் செய்தனர்.

அழிந்த கட்டடங்களையும், வீடுகளையும், பாடசாலைகள் மற்றும் ஆஸ்பத்திரிகளையும் அவர்கள் பார்வை இட்டனர். (இ-3)

# சிறப்பு நீதிமன்றம் முன் ஜெயலலிதா இன்று ஆஜர்

தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இன்று சிறப்பு நீதிமன்றில் ஆஜராக உள்ளார்.

சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க அரசுக்கு அதிகாரமில்லை; நீதிமன்றங்கள் தான் அமைக்க வேண்டும். எனவே சிறப்பு நீதிமன்றங்களை அரசு அமைத்தது செல்லாது என்று உத்தரவிடக் கோரி ஜெயலலிதா உயர் நீதிமன்றத்தைக் கேட்டிருந்தார்.

இது தொடர்பான தீர்ப்பு நேற்று அளிக்கப்பட்ட போது அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (இ-4)

# வங்கியில் கொள்ளை!

அம்பலாங்கொடை,'பட்டப்பொல இலங்கை வங்கிக் கிளையில் நேற்று அதிகாலை 3 லட்சத்து 96 ஆயிரம் ரூபா கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் வங்கியில் நுழைவதற்கு முன்னர் வங்கியின் பாதுகாவலரைக் கொன்றனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மற்றும் 3 வங்கி ஊழியர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கப்பல் சேவை

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு சஜிந்த கப்பல் மூலம் 500 பயணிகள் இன்று செல்ல ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இன்று கப்பலில் செல்ல பதிவு செய்தவர்களை காலை 7.00 மணிக்கு முன் யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதேநேரம்— பட்டியல் இலக்கம் 567 எதிர்வரும் முதலாம் திகதியுடனும்—

பட்டியல் இலக்கம் 571, 573, 574, 576, 577 ஆகியன அடுத்தமாதம் 10 ஆம் திகதியுடனும்—ரத்துச் செய்யப் படுவதாக சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

# கூரேயின் மனு அடுத்த மாதம் விசாரணை

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே கைது செய்யப்பட்டதையும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதையும் ஆட்சேபித்து கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு அடுத்த மாதம் 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும்.

இந்த மனு மீதான விசாரணைகள் நடைபெறும் போது கூரேயை தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்குமாறு அவர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் விடுத்த வேண்டுகோளை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

எனினும் கூரேயை சென்று பார்வையிடுவதற்கு வழக்கறிஞர்களுக்கும் வைத்தியர்களுக்கும் அனுமதி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பான ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் அவற்றை அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு எதிர் மனுதாரர்களிடம் கோரப்பட்டுள்ளது.

## சரத் கொங்கஹகே..
(முதலாம் பக்கத் தொடர்)

மாத்தறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மதுரபால எதிரிவீர, எச். ஏ. ஆர். பியசிறி கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஆஸாத் சாலி ஆகியோர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

கட்சியின் கோட்பாடுகளை மீறிச் செயற்பட்டார்கள் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. (இ-4-21)


# லலிதா திருமண சேவை

என்னிடம் மணமகனுக்குரிய ஜாதகங்கள் உண்டு. வெளிநாட்டிலோ, உள் நாட்டிலோ பொருத்தமான மணமக்களைத் (பெண்கள் 67 ஆம் ஆண்டுக்கு பிற்பட்டவர்கள்) தேர்ந்தெடுப்பதற்கு 25-06-97 தொடக்கம் 2-07-97 வரை தொடர்பு கொள்ளலாம்.

நாகலிங்கம் கந்தையா
லலிதா திருமண சேவை
மூத்த நயினார் கோயில் வடக்கு வீதி,
ஆனைக்கோட்டை. [47292]



# நவீன கூரை ஓடுகள் தயாரிப்பதற்கான நிறுவனம்

ஜேர்மன் தொழில் நுட்ப கூட்டுறவின் யாழ்.புனரமைப்பு திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ள பாடசாலைகள்,வீடுகள் ஆகியவற்றிற்கு தேவையான கூரை ஓடுகளை நவீன முறையில் தயாரிப்பதற்கான நிறுவனங்களை ஆரம்பிக்க முன் வருபவர்களுக்கு இலகு கடன் வசதியில் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

கூட்டுக் கைத்தொழில் உற்பத்தியில் (Joint Industrial Venture) பங்கேற்க விரும்பும் முதலீட்டாளர்கள் கீழ்க் காணும் விலாசத்தில் இன்று 25-06-1997 முற்பகல் 10-00 மணிக்கும் பிற்பகல் 4-00 மணிக்கும் இடையில் உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணைப்பாளர்
இல. 11 கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(48004)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org